**<u>S.C. No. 145 / 2023</u>**

**PW1 – Tmt. Kamala**

**07.04.2026**

**( A1, A2, A3, A5, A6 are Present. A4 absent, petition filed and allowed )**

<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.</u>

**<u>குறுக்கு விசாரணை :</u>**

**நேரம் 12.15 மணி**

ராமச்சந்திரா மருத்துவமனையில் சென்று பரிசோதனை செய்தபோது மருத்துவர்கள் எனக்கு சிகிச்சை கொடுத்து தான் என்னை அனுப்பினார்கள் என்றால் சரிதான். நான் ராமச்சந்திரா மருத்துவமனையில் நடந்த விவரத்தை கூறி தான் மருத்துவரிடம் பரிசோதனை செய்தேன் என்றால் காலில் அடிப்பட்டது என்று சொன்னேன் மற்றபடி எனக்கு நடந்ததை கூறவில்லை. நான் மருத்துவரிடம் எனக்கு பாலியல் துன்புறுத்தல் ஏற்பட்டது என்பதை எஸ்ஆர்எம்சி மருத்துவமனையில் கூறி பரிசோதானை செய்தேன் என்றும் அதில் கூட எனக்கு மார்பகத்தில் காயம்இருந்தது மற்றும் பிறப்புறுப்பில் காயம் இல்லை என்று சான்றிதழ் அளித்துள்ளார்கள் என்றால் தவறு. அன்றைய தினம் மதியம் 1.00 மணிக்கு கீழ்பாக்கம் அரசு மருத்துவனையில் பதிவுசெய்யப்பட்ட விபத்து பதிவேட்டில் முதல் தகவல் அறிக்கையின் குறிப்பிட்ட விவரங்களை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. கீழ்பாக்கம் அரசு மருத்துவமனை மருத்துவரிடம் பரிசோதனை செய்தபோது கூறிய எனக்கு மார்பகத்தில் ஏற்பட்ட காயமானது என்னால் வழக்கிற்கு வலுசேர்க்க ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. மருத்துவர் என்னை பரிசோதனை செய்தபோது எனக்கு மார்பகத்தில் ஏற்பட்டிருந்த கடித்த காயங்களை பார்த்தார். முதல் விசாரணையில் சந்தோஷ் என்பவர் என் மார்பகத்தின் மீது அமர்ந்திருந்திருந்ததாக கூறிய விவரத்தை போலீசார் விசாரணையிலும் மற்றும் நீதித்துறை நடுவர் விசாரணையிலும் கூறவில்லை என்றால் சரிதான். சந்தோஷ் என் மார்பகத்தில் அமர்ந்து கத்தி

வைத்து அமர்ந்திருந்தார். சாட்சி தாமாக முன்வந்து என் குடும்ப சூழ்நிலைக்கு பயந்து, என் கணவர் என்னை ஒதுக்கிவிடுவாரோ என்று கூறவில்லை, இதனால் எனக்கும் என் பிள்ளைகள் சரியாக பேசவில்லை என்று கூறுகிறார். சந்தோஷ் என் மார்பகத்தில் அமர்ந்து கத்தி வைத்து அமர்ந்திருந்தார் தற்போது தான் முதன்முறையாக நீதிமன்றத்தில் கூறுகிறேன் என்றாலும் போலீசார் விசாரணையிலும் மற்றும் நீதித்துறை நடுவர் விசாரணையிலும் கூறவில்லை என்றால் சரியல்ல. கூறியுள்ளேன். கணேஷ் டிரைவர் இளங்கோவை அடித்ததாகவும், சூர்யா என் முடியை பிடித்து இழுத்ததாகவும், தினேஷ் என்பவர் கார் சாவியை பறித்ததாகவும் கூறிய விவரங்கள் முதன்முறையாக நீதிமன்றத்தில் கூறுகிறேன் என்றாலும் போலீசார் விசாரணையிலும் மற்றும் நீதித்துறை நடுவர் விசாரணையிலும் கூறவில்லை என்றால் சரியல்ல. கருப்பையா என் கன்னத்தில் அடித்தார். கருப்பையா என் கன்னத்தில் அடித்ததாக முதன்முறையாக நீதிமன்றத்தில் கூறுகிறேன் என்றாலும் போலீசார் விசாரணையிலும் மற்றும் நீதித்துறை நடுவர் விசாரணையிலும் கூறவில்லை என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன்.

**நேரம் 12.30 மணி**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.